2014 ஜூலை 30]

ஆடுகள் மேய்த்தும், வனத்தில் விளையும் பொருட்களைச் சேகரித்தும் தங்கள் வாழ்க்கையை நடத்திவருகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டத்தின்கீழ் விலையில்லா ஆடுகள் மற்றும் கிரைண்டர், மிக்சி, மின் விசிறி போன்ற அனைத்துப் பொருட்களும் இங்குள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும், இங்கு ஓர் அரசுப் பள்ளி இருக்கிறது. அதில் 2 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்தப் பள்ளியில் 50 குழந்தைகள் படிக்கின்றனர். இவர்கள் வசிப்பதற்கு போதிய வீடுகள் இல்லாத காரணத்தினால், இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களைக்கூட பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் 35 குடும்பங்களுக்கு ஓடுகள் வேய்ந்த வீடுகள் கட்டித் தரப்பட்டன. அந்த வீடுகள் அனைத்தும் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளன. இந்த நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, இந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதற்கு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 284, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

284—

காலிப் பணியிடங்கள்

***34516—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள மருத்துவர், செவிலியர் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிவோடு வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 229 மருத்துவர் பணியிடங்களில் 190 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு அவர்கள் பணிபுரிந்துவருகின்றனர். மேலும், ஒப்பளிக்கப்பட்ட 250 செவிலியர் பணியிடங்களில் 250 பணியிடங்களும் முழுவதுமாக நிரப்பப்பட்டு, அவர்கள் பணியாற்றிவருகின்றனர். இதுதவிர, ஒப்பளிக்கப்பட்ட 85 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களில் 60 பணியிடங்கள் நிரப்பப்பட்டு அவர்கள் பணியாற்றிவருகின்றனர். காலியாக உள்ள மருத்துவர் மற்றும் பணியாளர்களின் பணியிடங்களை நிரப்பிட விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவமனை, ராஜீவ் காந்தி மருத்துவமனை போன்றவற்றில் இருக்கிற நெருக்கடியையும், நோயாளிகளின் அடர்த்தியையும் குறைப்பதற்காகத்தான் புறநகர் மருத்துவமனைகள் கட்டப்பட்டன. அப்படி கட்டப்பட்ட பெரியார் நகர்.. புறநகர் மருத்துவமனை மருத்துவக் கல்வித் துறையின்கீழ் இருந்தது. அப்போது முதுகலை படிக்கக்கூடிய மாணவர்களும், பயிற்சி மருத்துவர்களும் அங்கே வந்து சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது மருத்துவ சேவைத் துறைக்கு அந்த மருத்துவமனை மாற்றப்பட்டு

2014 ஜூலை 30]

விட்ட காரணத்தினால், போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஊழியர்கள் இல்லை என்கிற நிலை இருக்கின்றது. ஏற்கெனவே, இதுகுறித்து அவையில் பேசியுள்ளேன். ஆகவே, மீண்டும் மருத்துவக் கல்வித் துறைக்கு பெரியார் நகர் மருத்துவமனையை மாற்றி, மருத்துவர்கள், செவிலியர்கள், இதர ஊழியர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அண்ணா நகர், தண்டையார்பேட்டை, கே.கே. நகர், பெரியார் நகர் ஆகிய நான்கு இடங்களில் Peripheral hospitals இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் பெரியார் நகர் மருத்துவமனை மட்டும் D.M.S. control-லில் இருக்கின்றது. அதனை விரைவில் D.M.E. control-லில் கொண்டு வருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆய்வில் இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவர்கள், செவிலியர்கள் போதுமான அளவில் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை 17 ஆகும். 17 மருத்துவர்களும் முழுமையாகப் பணியில் இருக்கின்றார்கள். அதேபோன்று, செவிலியர்கள் எண்ணிக்கை 19 ; 19 பணியிடங்களிலும் செவிலியர்கள் முழுமையாக பணியில் இருக்கின்றார்கள். Para-medical பணியிடங்கள் 17 ஆகும். அந்த 17 பணியிடங்களிலும் முழுமையாக அவர்கள் பணியில் இருக்கின்றார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.